FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| மனைப்பொருளியல் - I | தரம் :- 13 | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

❖ *1 – 50* **வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தரப்பட்ட விடைத்தாளில் பொருத்தமான இடத்தில் அடையாளமிடுக.**

1. மனையொன்றை அமைக்கும் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.
   A. அறைகளில் சுவரலுமாரிகள் அமைத்தல்.
   B. கூரையின் உயரத்தை அதிகரித்தல்
   C. பல்நோக்குத் தளபாடங்கள் பயன்படுத்தல்
   D. வீட்டைசுற்றி ஆழமான வடிகால்கள் அமைத்தல்.
   E. கதவு யன்னல்களுக்கு உறுதியான பூட்டுக்கள் பயன்படுத்தல்
   இவற்றுள் உடலைப்பாதுகாப்பு தொடர்பான கூற்று
   1) A, B  2) B, D  3) A, E  4) DE  5) BC

2. வரவேற்பறையின் ஒரு பகுதி சாப்பாட்டறையாகப் பயன்படுத்துவதை வெளிக்காட்டும் கோட்பாடு
   1) பாதுகாப்பு  2) அந்தரங்கம்  3) நெகிழும் தன்மை
   4) நடமாடல்  5) திசைமுகம்

3. ஒரே இயல்பை வெவ்வேறு இடங்களில் இடம்பெறச் செய்து அதற்கமைய பார்வையைச் செலுத்துவது
   1) ஒழுங்குமுறை  2) மீளுதல்  3) எதிரமைத்தல்
   4) பெயர்வு  5) ஆரை விரிவுக்கோடு

4. பின்வருவன நிறம் தொடர்பாக ஒரு மாணவனால் எழுதப்பட்ட குறிப்பில் இடம் பெற்ற சில விடயங்களாகும்.
   A. ஒரு நிறத்தின் சாயல் அந்நிறத்தின் கருமை அல்லது வெண்மை.
   B. ஒரு நிறத்துடன் கருமைநிறம் கலக்கும்போது அதன் செறிவு குறையும்
   C. வெள்ளை நிறம் பெறுமானம் குறைந்த நிறம்
   D. நிறச்சக்கரத்தில் நடுநிலை நிறங்கள் இருப்பதில்லை.
   E. உதா சிவப்பு போன்ற வெப்பு நிறங்கள் முற்கொணரும் நிறங்கள்
   மேற்குறித்தவற்றுள் சரியான விடயங்கள்
   1) ABC  2) BCD  3) CDE  4) ADE  5) ABE

5. மனை அழகூட்டலின் போது அதிகளவில் பயன்படுத்தாத ரேகை
   1) கிடைரேகை  2) நிலைக்குத்து ரேகை  3) சரிவு ரேகை
   4) வளை ரேகை  5) மூலைவிட்ட ரேகை

6. நீலப்பச்சை, பச்சை, கரும்பச்சை என்பவற்றைப் பயன்படுத்தி சுவர், பாவு, தளபாட அணிகள் அலங்கரிக்கப்பட்டன. இவ் அலங்கரிப்பில் பயன்படும் நிற இசைவு
   1) எதிர் நிற இசைவு  2) தனிநிற இசைவு  3) கலப்புநிற இசைவு
   4) மும்மை நிற இசைவு  5) பிரிந்த நிரப்பு நிற இசைவு

7. திரைச்சீலைகள் இடும் போது அலங்காரத்தை அதிகரிக்கச் செய்யப் பயன்படுவது
1) பெல்மட் 2) கிளிப் 3) பின்ஸ் 4) நாடா 5) வளையல்

8. சடைமுனைகளிலுள்ள சீதமென்சவ்வின் ஆயுட் காலம்
1) 2 மாதம் 2) 3 – 6 நாட்கள் 3) 2 – 5 நாட்கள் 4) 6 மாதம் 5) 6 – 8 நாட்கள்

9. விலங்குணவுகளில் அடங்கியுள்ள இரு காபோவைதரேற்றுக்கள்
1) குளுக்கோஸ், பெத்தின் 2) கிளைக்கோஜன், சுக்குரோஸ்
3) செலுலோஸ், பெத்தின் 4) கிளைக்கோஜன், இலற்ரோஸ்
5) இலற்ரோஸ், மோல்ற்ரோஸ்

10. கொழுப்பமிலம் தொடர்பான சில கூற்றுக்கள் மாணவன் ஒருவனால் முன்வைக்கப்பட்டன.
A. விலங்குணவுகளில் பெருமளவு பிணைப்புக்கள் காணப்படும்
B. இரண்டு அல்லது மூன்று பிணைப்புக்கள் காணப்படும்
C. உடலில் கொலஸ்ரோலை உருவாக்கும்
D. இது தனி பல என வகைப்படுத்தப்படும்.
E. ஒற்றைக் காபன் பிணைப்புக்களால் உருவானது.
இவற்றுள் சரியான கூற்றுக்கள்
1) ACE 2) ABC 3) BCD 4) EDC 5) BDE

11. உண்டிவிருப்பின்மை, மலச்சிக்கல், தசையிழையங்கள் பலவீனமடைதல் ஆகிய அறிகுறிகள் எவ்விற்றமின் குறைபாட்டால் ஏற்படுகிறது.
1) விற்றமின் - B 2) விற்றமின் - $B_2$ 3) விற்றமின் $B_6$
4) விற்றமின் $B_{12}$ 5) விற்றமின் C

12. சிறுநீரக நோய், இதய நோய், நரம்பு இழையங்களின் செயற்பாடு தடைப்படல் போன்ற நிலமைகள் எக்கனியுப்புக் குறைபாட்டால் ஏற்படுகிறது
1) கல்சியம் 2) பொஸ்பரஸ் 3) இரும்பு 4) மக்னீசியம் 5) சோடியம்

13. A, B என்பவற்றில் முறையே விற்றமின், கனிப்பொருள் தொடர்பான கூற்றுக்கள் தரப்பட்டுள்ள
A. கல்சியம் பொசுபரஸ் அகத்துறிஞ்ச உதவும்
ரிகட்ஸ் நோய் ஏற்படும்
B. மந்த புத்தியுள்ள குழந்தை பிறத்தல்
தைரொட்சின் ஓமோன் உற்பத்தி
மேலுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விற்றமின் கனிப்பொருள் யாது?
1) விற்றமின் A இரும்பு 2) விற்றமின் D அயடீன் 3) விற்றமின் E கல்சியம்
4) விற்றமின் K பொஸ்பரஸ் 5) விற்றமின் C சோடியம்

14. A – அமிலேசு B – ரெனின் C - இலிப்பேசு D – சதைய அமிலேசு
மேலுள்ளவற்றில் இரைப்பை நொதியக் கூட்டம்
1) A B 2) C D 3) B C 4) A D 5) A C

15. பெருங்குடலில் வாழும் பற்றீரியாக்கள் எவ்விற்றமின்களைத் தொகுக்கும்
1) விற்றமின் A C 2) விற்றமின் B D 3) விற்றமின் K போலிக்கமிலம்
4) விற்றமின் D பயோடின் 5) விற்றமின் E பன்தோனிக்கமிலம்

16. ஒருவரின் உடல் நிறை 75kg எனவும் உயரம் 1.8m எனவும் உள்ள போது அவரின் உடற்திணிவுச் சுட்டி யாது?
1) 23 2) 20 3) 24 4) 30 5) 19

17. காய்கறிவகை, பச்சையிலை வகைகள் அதிகமாக எவ்வகை நோயாளர்களுக்கு மிக உகந்தது
   1) அதி உடற்பருமன், இதயநோய், வயிற்றோட்டம்
   2) இதயநோய், வயிற்றோட்டம், நீரிழிவு
   3) நீரிழிவு, இதயநோய், அதிக உடற்பருமன்
   4) அதிக உடற்பருமன், இரைப்பை அழற்சி, இதயநோய்
   5) அதிக உடற்பருமன், இரைப்பை அழற்சி, நீரிழிவு

18. மாஜரீனுக்கு சேர்க்கப்படும் விற்றமின்கள் எவை
   1) A D  2) A C  3) A B  4) A K  5) A E

19. விற்றமின் வில்லைகள் அடைக்கப்பட்ட போத்தல்களில் நீராவி உறிஞ்சியாக பயன்படுத்துவது
   1) ஒட்சிசன்  2) காபனீரொட்சைட்  3) சிலிக்கா ஜெல்  4) எதலீன்  5) மிலேன்

20. ஐக்கிய நாடுகளின் வேண்டுகோளின் படி சர்வதேச தர நிறுவனம் எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது.
   1) 1948  2) 1947  3) 1946  4) 1945  5) 1944

21. தரப்பட்ட கூற்றுக்களை வாசித்து வினாவுக்குரிய விடையைத் தெரிவு செய்க.
   - தக்காளி, வினாகிரி, தவிர்த்தல்
   - புரத உணவுகள் உண்ணல்
   - பொங்கச் செய்யும் பொருட்கள் சேர்ப்பதைத் தவிர்த்தல்
   - உரிய நேரத்துக்கு உணவு உண்ணல்.

   மேலேயுள்ள கூற்றுக்களை அனுசரிக்க வேண்டிய நோயாளி யாது?
   1) நீரிழிவு நோயாளி  2) மலச்சிக்கல் நோயாளி  3) இதய நோயாளி
   4) உயர்குருதி அமுக்கம்  5) இரைப்பை அழற்சி

22. பழவகை, காய்கறிவகைகளைப் பேணும் போது அவற்றின் நிறத்தைப் பாதுகாக்க சேர்க்கப்படுவது
   1) வினாகிரி  2) பென்சோயிக்கமிலம்  3) சோடியம் நைத்திரேற்று
   4) கந்தகவீரொட்சைட்  5) சித்திரிக்கமிலம்

23. பாலைப் பாச்சர் பாகம் செய்தலில் H. T. S. T முறை குறிப்பது
   1) உயர் வெப்பநிலையில் குறைந்த நேரம்  2) குறைவெப்பம் குறைந்த நேரம்
   3) உயர் வெப்பம் நீண்ட நேரம்  4) குறைந்த வெப்பம் நீண்ட நேரம்
   5) ஒரே வெப்ப நிலையில் நீண்ட நேரம்

உணவுச் சமிபாட்டுச் செயன்முறை தொடர்பான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| | போசனைக் கூறு | சமிபாட்டுக் கூறு | நொதியம் | சமிபாட்டு விளை பொருள் |
|---|---|---|---|---|
| 1. | .........A......... | உமிழ்நீர் | தயலின் | மோல்ற்ரோசு |
| 2. | புரதம் | .........B.......... | பெப்சின் | .........C.......... |
| 3. | கொழும்பு | சதையச்சாறு | இலிப்பேசு | கொழுப்பு அமிலம் + கிளிசரோல் |

24. A எனும் குறியீடு குறிப்பிடும் போசணைக் கூறு யாது?
   1) கொழுப்பு  2) விற்றமின்  3) மாப்பொருள்  4) புரதம்  5) கனியுப்புக்கள்

25. B யினால் குறிக்கப்படும் சமிபாட்டுச்சாறு யாது?
   1) இரப்பைச்சாறு  2) சதையச்சாறு  3) பித்தச்சாறு  4) குடற்சாறு  5) உமிழ்நீர்

26. C யினால் குறிக்கப்படும் சமிபாட்டு விளைபொருள் யாது?
1) கிளிசரோல் 2) மோல்ற்ரோசு 3) கொழுப்பமிலம்
4) பெத்தோன்கள் 5) குளுக்கோஸ்

27. கொழுப்பு குழம்பாக்கல் செயற்பாட்டில் துணைபுரியும் சுரப்பு எது?
1) உமிழ்நீர் 2) குடற்சாறு 3) சதையச்சாறு 4) இலிப்பேசு 5) பித்தச்சாறு

28. நேர் நைதரசன் சமநிலை இடம்பெறும் சந்தர்ப்பம் அல்லாதது
1) கர்ப்ப காலம் 2) குழந்தைப்பருவம் 3) வயோதிபப்பருவம்
4) கட்டிளம் பருவம் 5) பாலூட்டும் பருவம்

29. $C_3H_8O_3$ மூலக்கூற்றுச் சூத்திரம் குறிப்பது
1) தியரிக்கமிலம் 2) மிஸ்ரிக்கமிலம் 3) கிளிசரோல்
4) ஐதரோகாபன் 5) காபொக்சில் கூட்டம்.

30. பின்வருவன உணவு நற்காப்புக்கு முன்னரான முன் ஆயத்தச் செயன் முறை தொடர்பான விடயங்கள் சிலவாகும்.
A. காய்கறிகளிலுள்ள நொதியங்கள் செயலிழக்கும்
B. மணமும் சுவையும் அதிகரிக்கும்
C. விற்றமின்கள் பாதுகாக்கப்படும்
D. நுண்ணங்கிகளில் ஒரு பகுதி அழியும்
E. உணவு மென்மையடையும்
மேற்குறித்த விடயங்களில் காய்கறிகளை நீரில் அமிழ்த்தல் தொடர்பானவை.

1. ACE 2. BCE 3. ABE 4. CDE 5. ABC

31. இலங்கையின் போசனைக் குறைபாட்டின் கண்டி, கேகாலை, பதுளை பிரதேசங்களில் காணப்படும் குறைபாட்டு நோய்
1) மாலைக்கண் 2) குருதிச் சோகை 3) குவாசியக்கோர்
4) கண்டற் கழலை 5) பீற்ரோவின் புள்ளி

32. இலங்கையில் குருதிச் சோகை பற்றிய தரவுகளின் படி கூடுதலாப் பாதிக்கப்படும் பருவம்
1) கட்டிளம் பருவப் பெண்கள் 2) கர்ப்பிணித்தாய் 3) முன்பிள்ளைப் பருவம்
4) சாதாரண ஆண் 5) 5 – 10 வயதுக்குட்பட்டோர்

33. பொலி எதிலீன், பொலிபுரப்பொவீன் மூலம் உற்பத்தி செய்யப்படுவது
1) அலுமினியம் 2) காட்போட் 3) கண்ணாடி 4) தகரம் 5) பிளாஸ்ரிக்

34. மின்னோட்ட முதலியூடாக வீட்டு மின்சுற்றுகளுக்கு கிடைக்கும் ஆடலோட்ட மின்னோட்டம்
1) 220V 2) 230 V 3) 110V 4) 3300V 5) 2200V

35. முள்ளங்கி, கரட், தக்காளி, பீற்றூட் ஆகியவற்றில் அடங்கியுள்ள நிறப்பொருட்கள் முறையே
1) இலைக்கோபின், அந்தோசயனின், பிளேவோன், கரட்டின்
2) பிளேவோன், இலைக்கோபின், அந்தோசயனின், கரட்டின்
3) கரட்டின், அந்தோசயனின், பிளேவோன், இலைக்கோபின்
4) பிளேவோன், கரட்டின், இலைக்கோபின், அந்தோசயனின்
5) அந்தோசயனின், கரட்டின், பிளேவோன், இலைக்கோபின்

36. தாயின் உடல் நிலைமைகளில் சாதாரண பிரசவத்திற்கு அபாயமாக அமையாதது எது?
1) உயரம் 2) நிறை 3) வயது 4) உயர்குருதி அமுக்கம் 5) மலச்சிக்கல்

37. கழிவுப் பொருட்களை வகைப்படுத்தலுக்காக பயன்படுத்தப்படும் நிறக்குறிகளில் சேதனக்கழிவு, கண்ணாடி, உலோகம் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும் நிறங்கள் முறையே
1) பச்சை, சிவப்பு, கபிலம் 2) நீலம், சிவப்பு, கபிலம் 3) பச்சை, நீலம், சிவப்பு
4) நீலம், சிவப்பு, பச்சை 5) கபிலம், சிவப்பு, நீலம்

38. கர்ப்பகாலக் கட்டத்தின் போது போலிக்கமிலத்தை உட்கொள்வதினால் முளையத்துக்குக் கிடைக்கும் அனுகூலம்.
1) இரும்புச்சத்துக் குறைபாட்டைத் தவிர்த்தல் 2) விற்றமின் B வழங்கல்
3) நரம்புக் கலங்களின் வளர்ச்சியில் உதவுதல் 4) குருதியுறைதலைத் தூண்டுதல்
5) நீர்ப்பீடனத்தை ஊக்குவித்தல்.

39. கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் போது மாணவரின் ஆளுமை விருத்திக்கு ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டியது
1) போசாக்குள்ள உணவு வழங்கல் 2) நீர்ப்பீடன நிகழ்வுகளைக் கவனித்தல்
3) பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளல் 4) கற்றல் நடவடிக்கையை ஊக்கல்
5) உளவியற் சமநிலை பேணல்.

40. பிள்ளைப் பருவப் பிள்ளைகளின் நுண்ணிய தசைகளின் வளர்ச்சிக்குப் பொருத்தமான செயற்பாடுகள்.
1) நிறுத்தாடுவளை 2) ஊஞ்சலாடுதல் 3) ஏணியில் ஏறுதல்
4) மணிகோர்த்தல் 5) சைக்கிள் ஓடல்

41. கட்டிளம் பருவத்தினரின் சில செயற்பாடுகள் தர்பட்டுள்ளன
A. மதுபானம் போதை வஸ்துக்கு அடிமையாதல்
B. சர்வாதிகரப் போக்குடைய குடும்பம்
C. பாலியற் துர்ஸ்பிரயோகச் செயற்பாடுகள்
D. சீரற்ற குடும்பச் சூழல்
E. உளவியற் தேவை பூர்த்தி செய்யப்படாமை
மேற்கூறப்பட்டவற்றில் சமூக விரோதச் செயலுக்கான காரணிகள்
1) ABC 2) BDE 3) ACB 4) EDC 5) ADE

42. நார்களுக்கான பரிசோதனையின் முடிவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
- குளிர்மையானது, மென்மையானது, இலகுவில் அறுக்க முடியாது, கடதாசி எரியும் மணம், நீளப்பக்கமாகவும் குறுக்குப் பக்கமாகவும் கோடுகள் உண்டு.

மேலேயுள்ள இயல்புகளின் படி இனம் காணப்பட்ட நார் எது?
1) பருத்தி 2) பட்டு 3) கம்பளி 4) இலினன் 5) நைலோன்

43. நார் உற்பத்திச் செயன்முறையில் பின்பற்றப்படும் படிமுறை ஒழுங்கு
1) பட்டு நார்களை துடிக்கட்டையில் சுற்றி அவித்தல்.
2) எல்லா வகை நார்களையும் வெளிற்றுதல்
3) றெயோன் நார்களை உற்பத்தி செய்வதற்கு பருத்தித்துணி பயன்படுத்தல்
4) நைலோன் நார்களை உற்பத்தி செய்வதற்கு அடிபிக் அமிலமும் காபனிருசல்பைட்டும் பயன்படுத்தல்.
5) கம்பனித் துணியை உற்பத்தி செய்வதற்கு நார்களை இழுத்தலுக்கு உட்படுத்தல்

44. பின்வருவனவற்றில் அடிப்படைத்தையல் முறை, நுட்பத்தையல் முறைகள் முறையே
   1) சோம்தையல், தட்டைப்பொருத்து, பெட்டி மடிப்பு
   2) பெருநூலோடல், தட்டைப்பொருத்து, கம்பளித்தையல்
   3) கம்பளித்தையல், சிறுநூலோடல், பிரான்சியப் பொருத்து
   4) தோற்றா சோம், பிரான்சியப் பொருத்து, பிரான்சியமுடிச்சு
   5) பிரான்சியப் பொருத்து, நீள்குறுந்தையல், விஸ்பம் தையல்

45. சிறிய வட்டமொன்றினை நிரப்புவதற்கு பயன்படும் தையல்
   1) இறகுத்தையல்   2) மீன்முள்ளுத் தையல்   3) முறுக்குவடத் தையல்
   4) தனிச் சங்கிலித்தையல்   5) சிலந்தி வலைத்தையல்

46. துணி உற்பத்திச் செயன்முறையில் பெல்ற் செய்தல் ஒன்றாகும். பெல்ற் செய்தல் என்பது
   1) ஒட்டுப் பொருளைப் பயன்படுத்தி சில துணிப்படைகள் ஒட்டப்படும்
   2) ஒட்டும் பொருளைப் பயன்படுத்தி நார்களை ஒட்டி மெல்லிய மேற்பரப்பு தயார் செய்யப்படும்.
   3) வெப்பம், ஆவி அமுக்கம் ஆகியவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் நார்கள் தயார் செய்யப்படும்.
   4) நூல்களை முடிச்சிடுவதன் மூலம் தயார் செய்யப்படும்
   5) இழுபடும் துண்துளைகள் அமையுமாறு துணி தயார் செய்யப்படும்.

47. இரவிக்கை மாதிரியுருவிற்கான முன்பக்க மார்பளவை கணித்தல் சரியாகக் காட்டப்பட்டிருக்கும் விதம்.
   1) $\frac{\text{மார்பு}}{2} - 5 + 1.5 \div 2$   2) $\frac{\text{மார்பு}}{2} + 5 - 1.5 \div 2$   3) $\frac{\text{மார்பு}}{2} + 1.5 + 2$
   4) $\frac{\text{மார்பு} - 5}{2} + 1.5 \div 2$   5) $\frac{\text{மார்பு}}{2} + 5 + 1.5 \div 2$

48. தையல் ஆரம்பிக்கும் போது முடிச்சு இடாது ஆரம்பிக்கும் இடத்தில் மூன்று விஸ்பம் தையல் தைத்து தைக்கப்படும் தையல் எது?
   1) பெருநூல்   2) விஸ்பம்   3) பொருத்துவகை
   4) அலங்காரத்தையல்   5) நுட்பத்தையல்

49. துணியின் அகலத்தையும், சீரான ஓரங்களையும் கொண்டுள்ள அடர்த்தியான விளிம்பு
   1) ஊடைவிளிம்பு   2) கூடைவிளிம்பு   3) பாவு விளிம்பு
   4) விலா விளிம்பு   4) சரிவு விளிம்பு

50. வெள்ளைப் பருத்தி பாடசாலைச் சீருடையின் பழுப்பு நிறத்தை நீக்குவதற்குப் பயன்படுத்தும் சோதனைப் பொருள்
   1) கல்சியம் ஹபோகுளோரைட்   2) கல்சியம் காபனேற்
   3) சோடியம் ஐதரொட்சைட்   4) சோடியம் காபனேற்   5) கல்சியம் காபனேற்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| மனைப்பொருளியல் - II | தரம் :- 13 | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

❖ *1ம் வினா உட்பட ஏனைய வினாக்களில் இருந்து 2 வினாக்கள் தெரிவு செய்து மொத்தம் 3 வினாக்களுக்கு விடை எழுதுக.*

01. ரவி தம்பதியினர் தாம் வசிப்பதற்காக சிறிய வீடு ஒன்றை அமைத்தனர். வீடு அழகாகவும், நேர்த்தியாகவும் காட்சியளித்தது. ரவியுடன் ரவியின் தாயும், சகோதரியும் வசித்து வருகிறார்கள். ரவி, ரவியின் மனைவி, ரவியின் சகோதரி ஆகியோர் வேலைக்குச் செல்பவர்கள். ரவிக்கு 10 வயதிலும் 6 வயதிலும் பிள்ளைகள் உள்ளனர். காலை வேளையில் இவர்கள் மிகவும் பரபரப்பாக வேலைகளில் ஈடுபடுவார்கள்.

1) இவ்வீட்டைத் திட்டமிடும் போது பயன்படுத்திய கோட்பாடுகள் எவை?
2) இக்குடும்பத்தின் வேலைப்பழுவைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடைமுறைகள் எவை?
3) இல்ல அலங்கரிப்பில் பயன்படும் கலையின் அடிப்படை அம்சங்கள் எவை?
4) மனையிலுள்ளவர்களின் உடனலத்தைப் பாதுகாக்க மனையில் கையாண்ட உத்திகள் எவை?
5) மேற்குறித்த குடும்பத்திற்கான தளபாட அணிகளை அமைக்கும் போது பயன்படும் தையல்களை வகைப்படுத்திக் காட்டுக.

(25 புள்ளிகள்)

02.

1) வெப்பவலயப் பிரதேசங்களுக்கு பருத்தித் துணி மிகவும் பொருத்தமானது அதற்கான காரணங்களைத் தருக.
2) சேட் ஒன்றின் முன்பக்க உடற்பகுதி அமைக்கப்படும் விதத்தை வரைபடங்கள் மூலம் காட்டுக.
3) பருத்தி நார் உற்பத்தியை படிமுறையாகத் தருக?
4) ஆடைகளை அலங்கரிக்கும் இரண்டு அலங்காரத் தையல்களை படம் வரைந்து காட்டுக.

(20 புள்ளிகள்)

03.

1) குடும்பத்திற்கான உழைப்பை முகாமைப்படுத்துவதன் முக்கியத்துவங்கள் பற்றிக் குறிப்பிடுக.
2) இல்ல அலங்கரிப்பில் திரைச்சீலைகளைத் தெரிவு செய்யும் போது கருத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் எவை?
3) வீட்டு வேலைகளின் போது மின்னைச் சிக்கனமாகப் பயன்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை?
4) மனை அமைத்தலில் கூட்டமைப்பு எனும் தத்துவம் விளக்குவது யாது? (20 புள்ளிகள்)

*04.*

1) மனை அலங்காரத்தில் மனைத்தளபாடங்களைத் தெரிவு செய்து, ஒழுங்குபடுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?
2) சோறு சமைக்கும் அடுப்பின் (RICE COOKER) பயன்பாடு, பராமரிப்பு முறைகள் பற்றி விளக்குக.
3) நீருக்கும், குடிநீருக்கும் இடையிலான வேறுபாடு யாது?
4) இல்லத் துணையணிகளின் விளிம்பை நேர்த்தியாக்கும் முறைகளைக் குறிப்பிடுக.

*(20 புள்ளிகள்)*

## பகுதி – II

**5ம் வினா உட்பட வேறு மூன்று வினாக்கள் தெரிவு செய்து மொத்தம் 4 வினாக்களுக்கு விடை எழுதுக.**

05. உணவுப் பழக்க வழக்கங்கள் நபர் ஒருவரின் போசனை நிலைமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. தொழிலுட்ப வளர்ச்சி வேலைப்பழு காரணமாக மக்கள் உடனடி உணவுகளில் அதிக நாட்டம்.

1) நாளாந்த உணவு வேளைகளில் அதிகளவு பழங்கள், இலைவகைகள், காய்கறிகள் சேர்க்கப்படுவதற்கான விளக்கம் யாது?
2) அச்சாறு, சோஸ் போன்ற நற்காப்புச் செய்யப்பட்ட உணவுகளை அடிக்கடி உள்ளெடுப்பதால் எதிர் நோக்கும் விளைவுகளை விளக்குக.
3) உணவு உற்பத்தியில் சத்தூட்டல் / வளமூட்டல் என்பதனை விளக்குக?
4) முன்பிள்ளைப்பருவ உடல் வளர்ச்சியில் அவர்களின் உணவுபழக்க வழக்கங்கள் பெரிதும் பங்காற்றுகின்றன. இதனை விளக்குக.
5) கர்ப்பிணிப் பெண்ணின் தேவைகளில் பிரதானமானது போசனையாகும். போசனையின் முக்கியத்துவத்தை விளக்குக.

*(25 புள்ளிகள்)*

The National e-learning Portal for the General Education

*06.*

1) கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஏற்படும் ஆபத்துக்கு ஏதுவான காரணிகளைக் குறிப்பிடுக.
2) கர்ப்பிணித் தாய்மாருக்கு பிணியாய் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் சோதனைகளும், நடவடிக்கைகளும் எவை எனக் குறிப்பிடுக.
3) பிள்ளையின் சிறப்பான ஆளுமை வளர்ச்சிக்கு வீட்டுச் சூழல் எவ்வாறு அமைய வேண்டும் எனக் குறிப்பிடுக.
4) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான ஒத்துழைப்புப் பெறக்கூடிய நிறுவனங்கள் எவை?

*(20 புள்ளிகள்)*

*07.*

1) உணவை ஆயத்தப்படுத்துவதற்குரிய நுட்பங்கள் எவை?
2) உணவு வேளையொன்றைத் திட்டமிடும் போது பயன்படுத்தப்படும் மூலதாரங்கள் எவை?
3) போசனை என்றால் என்ன? கோட்டுப்படம் மூலம் விளக்குக.
4) பின்வருவனவற்றை விளக்குக.

   A – உடல் திணிவுச் சுட்டி

   B – நைதரசன் சமநிலை

*(20 புள்ளிகள்)*

*08.*

1) சமிபாட்டு செயல் முறையில் உள, பௌதீக, இரசாயனக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. உள, பௌதீக, இரசாயனக் காரணிகள் என்பதனை விளக்குக.
2) குறைபோசனை நிலமையைத் தடுக்க பாடசாலையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எவை?
3) கர்ப்பிணிப் பருவத்திலும், கட்டிளம் பருவத்திலும் குருதிச்சோகை அதிகமாக ஏற்படுகிறது. ஒவ்வொன்றுக்குமான காரணங்களை விளக்குக.
4) பின்வரும் தொழிற்பாட்டை விளக்குக? A - இன்சுலின்
   B – பித்தச்சாறு C – ஐதரோக் குளோறிக்கமிலம் *(20 புள்ளிகள்)*

*09.*

1) வீட்டு மட்டத்தில் மரக்கறிகளைப் பேணும் முறைகள் எவை?
2) உணவு பொதியிடலுக்குப் பயன்படும் பொருட்களை அவற்றின் இயல்புகளுக்கு ஏற்ப உதாரணங்களுடன் வகைப்படுத்துக.
3) பொதியிடலின் அனுகூலங்கள் எவை?
4) சுட்டியிடலின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?

*(20 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education